தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை


# நாகப்பட்டினம் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(15.05.2024 முதல் 19.05.2024)

அறிக்கைஎண்: 13/2024 தேதி : 14.05.2024

## நாகப்பட்டினம் மாவட்டத்தின் கடந்தவாரவானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 35 - 36 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 26 - 28 °செ ஆகவும் பதிவானது. மேலும் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

## நாகப்பட்டினம் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (15.05.2024 முதல் 19.05.2024).

| கடந்த வார வானிலை (10.05.2024 முதல் 13.05.2024) | | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு (15.05.2024 முதல் 19.05.2024) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 10/05 | நாள்-2 11/05 | நாள்-3 12/05 | நாள்-4 13/05 | தேதி | நாள்-1 15/05 | நாள்-2 16/05 | நாள்-3 17/05 | நாள்-4 18/05 | நாள்-5 19/05 |
| 0.0 | 0.3 | 0.4 | 0.0 | மழை (மி.மீ.) | 12 | 10 | 32 | 30 | 28 |
| 35 | 36 | 36 | 36 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 35 | 34 | 33 | 31 | 31 |
| 28 | 27 | 27 | 26 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 26 | 25 | 24 | 23 | 22 |
| 5 | 5 | 6 | 7 | மேகமூட்டம் (ஆக்டா) | 8 | 8 | 8 | 8 | 8 |
| 66-70 | 66-67 | 72-69 | 72-71 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80-60 | 80-60 | 80-50 | 80-60 | 80-50 |
| 7 | 8 | 7 | 5 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 10 | 8 | 14 | 20 | 20 |
| தென் தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | வடக்கு | காற்றின் திசை | தெற்கு | தென் கிழக்கு | தெற்கு | தென் தென் மேற்கு | தென் தென் மேற்கு |

## நாகப்பட்டினம் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் தெளிவாக காணப்படும். 15.05.2024 முதல் 19.05.2024 ஆகிய தினங்களில் லோசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 31 - 35 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 22 - 26 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 50 - 60 சதவிகிதமாகவும், காற்றின் வேகம் 8 – 20 கி.மீ. என்ற அளவுக்கு பெரும்பாலும் தெற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | |
|---|---|
| பொது | மழையை பயன்படுத்தி பசுந்தாள் உரப்பயிர்களான தக்கைப்பூண்டு, சணப்பை மற்றும் கொழிஞ்சி போன்றவற்றைத் தெளிக்கவும். |
| | வரும் நாட்களில் மழையைப் பயன்படுத்தி கோடை உழவு செய்து களைகளை கட்டுப்படுத்துவதுடன் பூச்சிகளின் கூண்டுப் புழுக்களை அழிக்கவும். |

| | | |
|---|---|---|
| | | பயிர்களுக்கு உரம் இடுவது மற்றும் பூச்சி மருந்து தெளிப்பதைத் தவிர்க்கவும் |
| நெல் | நாற்றாங்கால் | வரும் நாட்களில் மிதமானது முதல் கனமழை பெய்யும் என்பதால் நாற்றாங்காளுக்கு முறையான வடிகால் வசதி ஏற்படுத்தவும் |
| வாழை | | வாழை மரங்கள் காற்று மற்றும் மழையால் சாயாமல் இருக்க, வாழை மரங்களுக்கு முட்டுக்கொடுத்து பாதுகாக்கவும். |
| கால்நடைகளுக்கு | மாடு மற்றும் ஆடு | எதிர்பார்க்கப்படும் மழையால் கன்றுகள் மற்றும் ஆட்டுகுட்டிகளுக்கு சளி போன்ற உபாதைகள் ஏற்பட்டு நுரையீரல் அழற்ச்சி ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே மழை சாரல் படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். |

**குறுஞ்செய்தி**

வரும் நாட்களில் மிதமானது முதல் கனமழை பெய்யும் என்பதால் நாற்றாங்காளுக்கு முறையான வடிகால் வசதி ஏற்படுத்தவும்

**இயக்குநர்**